ஹாக்ஸ்பரி-நேபியன் (HAWKESBURY-NEPEAN)
மெய்த்தகவல் அறிக்கை (FACT SHEET)

# வெள்ளப்பெருக்கிற்குத் தயாராகுங்கள்

சில எளிய செயல்கள்
உயிர்களைக் காப்பாற்றும்

## உங்கள் உள்ளூர் வெள்ள அபாயம்

ஹாக்ஸ்பரி-நேபியன் பள்ளத்தாக்கானது (Hawkesbury-Nepean Valley) வெள்ளப்பெருக்கு பற்றிய நீண்ட வரலாற்றைக் கொண்டுள்ளது.

அதிக மழைப்பொழிவு இருக்கும் போது, ஐந்து பெரிய ஆறுகளில் இருந்து தண்ணீர் வெள்ளச் சமவெளியில் பாய்கிறது. எபினேசரிலிருந்து (Ebenezer) ஸ்பென்சர் (Spencer) வரை சுமார் 80 கிலோமீட்டர் வரையிலான குறுகிய பள்ளத்தாக்குகள் இருப்பதால் இது கடலை அடைவது மட்டுப்படுத்தப் படுகிறது. இதனால் வெள்ள நீர் அதிகரித்து, வேகமாக உயர்ந்து, பரந்த, ஆழமான மற்றும் ஆபத்தான வெள்ளப்பெருக்கை ஏற்படுத்துகிறது.

வெள்ள நீரில் குப்பைகள், மின் கம்பிகள், மாசுக்கள் மற்றும் கழிவுநீர் போன்ற மறைந்திருக்கும் ஆபத்துகள் உள்ளன. வெள்ளப்பெருக்கினால், பாலங்கள் துண்டிக்கப்படலாம், சாலைகள் மூடப்படலாம், பொதுப் போக்குவரத்து வழித்தடங்களில் இடையூறு இருக்கலாம், மின்சாரம் தடைப்படலாம், அத்துடன் கைப்பேசி மற்றும் இணைய இணைப்புகளில் தடங்கல் ஏற்படலாம்.

வெள்ளச் சமவெளியில் வசிக்கும் அனைவரும் தயாராக இருப்பது அவசியமாகும். மேலும் தகவல்களுக்குப் பின்வரும் இணையதளத்தில் பார்க்கவும்: **www.myfloodrisk.nsw.gov.au**

## ஒரு வெள்ளப்பெருக்கிற்கு முன் எப்படித் தயாராவது

✓ **புதுப்பித்த அறிவிப்புகள் மற்றும் எச்சரிக்கைகளை எங்கு பெற்றுக்கொள்வது என்பதை அறிந்து கொள்ளவும்**

- உள்ளூர் வானிலை பற்றிய புதுப்பித்த அறிவிப்புகளுக்கு, வானிலை ஆய்வு மையம்
- வெள்ளப்பெருக்குகள் மற்றும் புயல்கள் பற்றிய தகவல்களுக்கு, நியூ சவுத் வேல்ஸ் மாநில அவசரச் சேவை (NSW SES)
- அவசரகால ஒலிபரப்புக்கு ABC வானொலி
- 'Hazards Near Me NSW' செயலியைப் பதிவிறக்கம் செய்து, கண்காணிப்பு மண்டலத்தை உருவாக்கவும்

✓ **'எடுத்துச் செல்லத் தயாராக இருக்கும் ஆயத்தப் பெட்டி' (Get Ready to Go Kit) ஒன்றைத் தயார் செய்யவும்**

**எந்தப் பொருட்களை அடுக்கி வைக்க வேண்டும்:**

1. மருந்துவகைகள் மற்றும் மருந்துச்சீட்டுகள் போன்ற சுகாதாரப் பராமரிப்புப் பொருட்கள்
2. உங்கள் முக்கிய ஆவணங்களின் நகல்கள் (காகித நகல்கள் அல்லது மின்னியல் (digital) முறையில் சேமிக்கப்பட்டவை)
3. முக்கியமான மதிப்புமிக்க பொருட்கள் மற்றும் நினைவுச் சின்னங்கள்
4. முக்கியத் தொலைபேசி எண்கள்
5. வானொலி, கைமின்விளக்கு (torch), கைப்பேசி மின்னேற்றிகள் (phone chargers) மற்றும் மின்கலன்கள் (batteries)
6. ஆடை மற்றும் தனிப்பட்டோருக்கான பொருட்கள்

✓ **வெளியேறுவதற்கான திட்டம் ஒன்றை உருவாக்கவும்**

நீங்கள் எங்கு செல்வீர்கள், எப்படி அங்கு சென்றடைவீர்கள், எந்த வெளியேற்றப் பாதைகளை நீங்கள் பயன்படுத்தலாம், உங்கள் விலங்குகளை என்ன செய்வீர்கள், உங்கள் ஆரோக்கியத்தை நீங்கள் எவ்வாறு கையாள வேண்டும் என்பதை அறிந்து கொள்ளவும்

✓ **உங்கள் திட்டத்தைப் பகிர்ந்து கொள்ளவும்**

நீங்கள் வெளியேற வேண்டியிருந்தால் நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள் என்பதைப் பற்றி உங்கள் உறவினர்கள், நண்பர்கள் மற்றும் அண்டை வீட்டாருடன் கலந்துரையாடவும்

## ஒரு வெள்ளப்பெருக்கின் போது என்ன செய்ய வேண்டும்



**நியூ சவுத் வேல்ஸ் மாநில அவசர சேவையின் (NSW SES) வெள்ளத் தகவல் மற்றும் அவசர எச்சரிக்கைகளைத் தேடவும்**

- வெள்ளப்பெருக்கு பற்றிய சமீபத்திய தகவல்கள் மற்றும் ஆலோசனைகளுக்கு, உங்கள் உள்ளூர் ABC வானொலி நிலைய ஒலிபரப்பைக் கேட்கவும்
- (NSW SES) ஆலோசனையைப் பின்பற்றவும். வெளியேறும்படி உங்களைக் கேட்டுக்கொண்டால், மிகவும் தாமதமாகும் வரையில் காத்திருக்க வேண்டாம்



**உங்களது 'எடுத்துச் செல்லத் தயாராக இருக்கும் ஆயத்தப் பெட்டியை' (Get Ready to Go Kit) கொண்டு செல்லவும்**

- இதில் உங்கள் மருந்துவகைகள், மருந்துச் சீட்டுகள் மற்றும் ஏதாவது உதவி உபகரணங்களும் அடங்கியிருக்க வேண்டும்



**உங்கள் விலங்குகளைக் கூட்டிக்கொண்டு செல்லவும்**

- அவற்றை நாடாக்களுடன் (leashes) இணைக்கவும் அல்லது சுமந்து செல்லும் சாதனங்களில் (carriers) வைக்கவும்
- உணவு, மருந்து மற்றும் பதிவு/தடுப்பூசி ஆவணங்களை எடுத்துக் கொள்ளவும்



**எங்கு செல்ல வேண்டும் என்பதைத் தெரிந்து கொள்ளவும்**

- வெளியேற்றங்கள் பற்றிய ஆலோசனையைப் பின்பற்றவும், அத்துடன் நேரடி (live) போக்குவரத்துத் தகவலையும் உறுதிப்படுத்திக் கொள்ளவும்
- உங்களுக்கு முடியுமானால், வெள்ளச் சமவெளிக்கு வெளியே உள்ள உறவினர்கள் அல்லது நண்பர்களிடம் செல்லவும்
- அதிகாரப்பூர்வ வெளியேற்ற மையங்கள் அவசரகாலத்தில் அறிவிக்கப்படும்



**ஒருவரையொருவர் கவனித்துக் கொள்ளவும்**

குடும்பத்தினர், நண்பர்கள் மற்றும் அண்டை வீட்டாருடன் தகவலைப் பகிர்ந்து கொள்ளவும். ஒருவருக்கொருவர், அதிலும் குறிப்பாக உதவி தேவைப்படும் நபர்களுக்கு உதவவும்

SES
NSW STATE EMERGENCY SERVICE

மேலும் அறிந்து கொள்ள **www.ses.nsw.gov.au/flood-awareness-nsw/sydney-rivers/hawkesbury-nepean-valley/** என்ற இணையதளத்துக்குச் செல்லவும்

## தகவல்களை எங்கே கண்டறிவது

### பார்வையிட வேண்டிய பயனுள்ள இணையதளங்கள் மற்றும் பதிவிறக்கம் செய்ய வேண்டிய கைப்பேசிச் செயலிகள் (apps)

- உள்ளூர் வானிலை பற்றிய புதுப்பித்த அறிவிப்புகள்: **www.bom.gov.au** மற்றும் வானிலை ஆய்வுமையச் செயலி
- **'Hazards Near Me'** செயலியானது நியூ சவுத் வேல்ஸில் காட்டுத்தீ மற்றும் வெள்ளப்பெருக்கு பற்றிய தகவல் மற்றும் எச்சரிக்கைகளைக் காண்பிக்கும்
- உள்ளூர் ABC வானொலி அலைவரிசை: **https://reception.abc.net.au** மற்றும் ABC Listen செயலி
- வெள்ளம் மற்றும் புயல் பற்றிய புதுப்பித்த அறிவிப்புகள்: **www.ses.nsw.gov.au** **www.facebook.com.au/NSW.SES**
- உங்கள் விலங்குகளுக்காகத் திட்டமிடுங்கள்: **www.getreadyanimals.nsw.gov.au**
- நேரடிப் (Live) போக்குவரத்து தகவல்: **www.livetraffic.com** மற்றும் நேரடிப் போக்குவரத்துச் செயலி

## உதவி தேவைப்படுகிறதா?

### வெள்ளப்பெருக்கு ஏற்படும் சமயத்தில், அவசர உதவிக்கு, நியூ சவுத் வேல்ஸ் மாநில அவசரகாலச் சேவையை (NSW SES) 132 500 என்ற எண்ணில் அழைக்கவும்

### உயிருக்கு ஆபத்தான அனைத்து அவசர உதவிகளுக்கும் 000 -ஐ அழைக்கவும்

- செவித்திறன்/பேச்சுத்திறன் குறைபாடுள்ளோருக்கு SMS NRS: 0423 677 767
- இணைய அஞ்சல் (Internet Relay): **https://internet-relay.nrscall.gov.au**
- நீங்கள் வீடற்றவராக இருந்தால், **Link2Home** -ஐ **1800 152 152** என்ற எண்ணில் அழைக்கவும்
- மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவர் தேவைப்பட்டால், அவசரச் சேவைகள் மொழிபெயர்ப்புச் சேவைகளை அணுகலாம்

## எனது முக்கியத் தொடர்புகள்

### அவசரகாலத்தில் நீங்கள் யாரைத் தொடர்பு கொள்ள வேண்டும்?

(எ.கா. அவசரகாலத் தொடர்பு, உறவினர்கள், நண்பர்கள், மருத்துவர், மருந்தாளுநர், பராமரிப்பாளர், ஆதரவுப் பணியாளர், Link2Home)

| | |
|---|---|
| பெயர்: ............ | தொலைபேசி: ............ |
| பெயர்: ............ | தொலைபேசி: ............ |
| பெயர்: ............ | தொலைபேசி: ............ |
| பெயர்: ............ | தொலைபேசி: ............ |

## எனது சரிபார்ப்புப் பட்டியல்

### நான் தயாராக இருக்கிறேன், ஏனென்றால்: ✓

- → வானிலை பற்றிய புதுப்பித்த அறிவிப்புகள், எச்சரிக்கைகள் மற்றும் ஆலோசனைகள் போன்ற தகவல்களை எங்கு தேடுவது என்பது எனக்குத் தெரியும்
- → வெளியேற்றத்தில் நான் எங்கு செல்ல வேண்டும், எப்படி அங்கு செல்ல வேண்டும் என்பது எனக்குத் தெரியும்
- → என்னுடன் எதை எடுத்துச் செல்ல வேண்டும் என்பது எனக்குத் தெரியும்
- → நாங்கள் வெளியேற வேண்டியிருந்தால் நாங்கள் என்ன செய்யப் போகிறோம் என்பது பற்றி எனது வீட்டாருடன் நான் பேசியுள்ளேன்
- → எனது விலங்குகளைப் பாதுகாப்பாக வைத்திருப்பதற்கான ஒரு திட்டம் என்னிடம் உள்ளது
- → எனது உடல்நிலையை நான் எவ்வாறு கையாளப் போகிறேன் என்பது எனக்குத் தெரியும்
- → நான் எனது திட்டத்தை உறவினர்கள், நண்பர்கள் மற்றும் அண்டை வீட்டாருடன் பேசியுள்ளேன்
- → என்னுடைய முக்கிய தொலைபேசி எண்களின் பட்டியல் ஒன்றை நான் தயாராக வைத்துள்ளேன்